ஒரு விரல் புரட்சி செய்வோம்! நம் உரிமையை நிலைநாட்டுவோம்! -இது நமக்கான தேர்தல்-
தின தமிழ்
தேர்தல் நாள் ஏப்ரல் 23

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 12.04.2026 • மலர் 04 • இதழ்: 101 • Edition : Nagercoil • 12.04.2026 • Vol : 04 • Issue : 101 • Page : 4 • Rs. 5/-

### என்டிஏ வந்தால் மீண்டும் தமிழகத்தை

# இருண்ட காலத்துக்குள் தள்ளிவிடுவர்

## புதுக்கோட்டையில் முதல்வர் ஸ்டாலின் பேச்சு

புதுக்கோட்டை, ஏப். 12

“என்டிஏ கூட்டணி தமிழ்நாட்டுக்குள் வந்து விட்டது என்றால், தமிழ்நாட்டை மீண்டும் இருண்ட காலத்துக்குள் தள்ளிவிடுவார்கள். தமிழினத்துக்கும் தமிழ்நாட்டுக்கும் துரோகம் செய்வது பாஜக.வின் வழக்கம். அதற்குத் துணை போவது தான் அ.தி.மு.க.வின் பழக்கம்” என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

புதுக்கோட்டையில் இன்று (ஏப்ரல் 11) நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் ஆற்றிய உரையின் விவரம்: புதுக்கோட்டைக்கு என்று பெரிய வரலாறு இருக்கிறது. இங்கு இரண்டு இளைஞர்கள் இருந்தார்கள். கீரனூர் முத்து மற்றும் விராலிமலை சண்முகம். 1965இல் தாய்த்தமிழைக் காப்பதற்காக தங்களின் உயிரையே தந்த இளைஞர்கள் அவர்கள். தமிழுக்கு மீண்டும் ஒன்றிய பா.ஜ.க. அரசால் ஆபத்து வந்திருக்கிறது. அந்த பா.ஜ.க.வையும் – அவர்களை தூக்கி சுமக்கும் அடிமை அ.தி.மு.க.வையும் வேரோடும், வேரடி மண்ணோடும் வீழ்த்த உங்கள் ஆதரவைக் கேட்டு வந்திருக்கிறேன்.

இந்தத் தேர்தல் என்பது, எதற்கான தேர்தல்? இந்தத் தேர்தலில் வெல்லப் போவது யார், தமிழ்நாடா? டெல்லியா? தமிழ்நாட்டுக்கு எது தேவை? மக்களாட்சியா? சர்வாதிகாரமா? இதை நீங்கள், ஏப்ரல் 23 அன்றைக்கு ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் காட்ட வேண்டும்; நிரூபிக்க வேண்டும். கிரிக்கெட்டில் பல பிளேயர்ஸ், பல ரெக்கார்டுகளை வைத்திருப்பார்கள். ஆனால், சச்சின் டெண்டுல்கரைப் பார்த்தீர்கள் என்றால், அவரிடம் அனைத்து ரெக்கார்டுமே இருக்கும்! அரசியலில் அப்படிப்பட்ட முறியடிக்க முடியாத அனைத்து ரெக்கார்டும் தி.மு.க.தான் செய்திருக்கிறது என்பதை பெருமையோடு சொல்கிறேன். இனியும் தொடர்ந்து நாம்தான் ரெக்கார்டு பிரேக் செய்யவும் போகிறோம்.

நம்முடைய திட்டங்களைப் பார்த்துதான், இன்றைக்கு பல்வேறு மாநிலங்கள் காப்பி அடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏன், ஒன்றிய அரசே காப்பி அடித்துக் கொண்டிருக்கிறது. மக்களுக்கான முன்னோடி திட்டங்களை செயல்படுத்துவதில், தி.மு.க.தான் ஒரிஜினல். ஆனால், இத்தனையும் செய்து கொண்டிருக்கும் இந்த ஸ்டாலின், கொரோனாவில் போயிருக்க வேண்டும் என்று பழனிசாமி வன்மத்துடன் பேசிக் கொண்டிருக்கிறார். இந்த ஸ்டாலின் இருந்து, என்னுடைய மக்களுக்கு இன்னும் ஏராளமான திட்டங்களை செய்யத்தான் போகிறேன்; அதையும் நீங்கள் பார்க்கத்தான் போகிறீர்கள்.

என்டிஏ எனும் பேரிடரை, தமிழ்நாட்டுக்குள் பின்வாசல் வழியாக கொண்டு வருவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் முதன்மை அடிமைதான், பழனிசாமி அவர் பழனிசாமி இல்லை. ஆமாம்சாமி அடிமைசாமி. அ.தி.மு.க. எந்தக் கூட்டணியில் அடிமை சாசனம் எழுதி கொடுத்து சேர்ந்திருக்கிறது. அன்னைத் தமிழுக்கும் தமிழினத்துக்கும் தமிழ்நாட்டுக்கும் துரோகம் செய்யும் என்டிஏ கூட்டணியில் சேர்ந்திருக்கிறது. அந்தக் கூட்டணி டெல்லியில் வைத்து முடிவு செய்யப்பட்ட கூட்டணி! அனைவருக்கும் தெரியும். ஊழல்வாதிகளும் தேர்ந்த துரோகிகளும், காவி கும்பலை தோளில் சுமந்து கொண்டு வருகிறார்கள்.

நேற்றுகூட, பா.ஜ.க.வில் இருக்கும் ஒன்றிய இணை அமைச்சர் ராம்தாஸ் அத்வாலே அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்? தமிழ்நாட்டில் என்டிஏ கூட்டணி ஆட்சியை அமைப்போம் என்று பேசியிருக்கிறார். அடிமைசாமியான பழனிசாமி இதற்கு ஏதாவது பதில் சொன்னாரா? என்ன சொல்வார்? ஒன்றும் சொல்லவில்லை.

தமிழ்நாட்டுக்கு வரும் பா.ஜ.க. அமைச்சர்கள் எல்லாம் என்னவெல்லாம் பேசிவிட்டு போகிறார்கள் என்று பத்திரிகைகளில், டி.வி.யில், செய்திகளில் வருகிறது. அனைத்தையும் பார்க்கிறீர்கள். அமைச்சராக இருக்கக்கூடிய பியுஷ் கோயல் – அமைச்சராக இருக்கக்கூடிய தர்மேந்திர பிரதான் என்று இங்கு வருபவர்கள் எல்லாம், இந்தித் திணிப்புக்கு ஆதரவாக மும்மொழிக் கொள்கையை செயல்படுத்துவோம் என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள். இதை எதிர்த்து அடிமைசாமி ஏதாவது குரல் கொடுத்திருக்கிறாரா?

ஒன்றிய கல்வி அமைச்சராக இருக்கும் தர்மேந்திர பிரதானின் வேலை என்ன? கல்வியை வளர்ப்பதில்லை; கல்வியை காவிமயமாக்கினார்! இந்தியைத் திணிக்க மும்மொழிக் கொள்கைக்கு ஆதரவாக பேசிவிட்டு செல்கிறார்.

இந்தித் திணிப்பை ஏற்றுக் கொள்ளவில்லை என்று நம்முடைய குழந்தைகளின் படிப்புக்கு கொடுக்க வேண்டிய, இரண்டாயிரம் கோடி ரூபாய் கல்வி நிதியை கொடுக்காமல் தடுப்பது! இதெல்லாம்தான், அவரது வேலை.

மும்மொழித் திட்டத்தை செயல்படுத்துங்கள், இரண்டாயிரம் கோடியை தருகிறோம் என்று அமைச்சர் பிரதான் சொன்னார். இரண்டாயிரம் கோடி இல்லை; பத்தாயிரம் கோடியே கொடுத்தாலும், இந்தியைத் திணிக்க அனுமதிக்க மாட்டேன். எங்கள் குழந்தைகளின் படிப்புச் செலவையும், ஆசிரியர்களுக்கான சம்பளத்தையும் நானே கொடுத்துக் கொள்கிறேன் என்று உறுதியாக சொன்னவன் தான், இங்கே உங்கள் முன்னால் நிற்கின்ற ஸ்டாலின். இதுவே அடிமைசாமியாக இருந்தால், எதிர்த்து குரல்கொடுத்திருப்பாரா? இதெல்லாம் ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் நீண்டகால செயல்திட்டங்களின் ஒரு பகுதி.

எதற்காக இதையெல்லாம் செய்கிறார்கள் என்றால், நம்முடைய குழந்தைகள் கல்வி நிலையங்களைவிட்டு வெளியேற வேண்டும்; அறிவியல்பூர்வமாக சிந்திப்பதை நிறுத்த வேண்டும்; வாட்ஸ்அப் வதந்திகளையும், பிற்போக்குத்தனங்களையும் நம்ப வேண்டும்; அப்போதுதான் அந்தக் காலம் போன்றே நாம் முன்னேறாமல் முடங்கிக் கிடப்போம்; ஒரு சிலர் மட்டும் வாய்ப்புகளை தட்டிப் பறித்து, முன்னேறுவார்கள். இதுதான், அவர்களின் திட்டம்; அவர்களின் எண்ணம். இதற்கான செயல்திட்டங்களுக்கு எல்லாம் ஆமாம்சாமி போடும் முரட்டு அடிமையாக வாய்த்திருப்பவர்தான், இந்த அடிமைசாமி! அடுத்தடுத்த துரோகங்களுக்கு அவர்கள் வைத்திருக்கும் பெயர்தான், என்டிஏ கூட்டணி.

பழனிசாமிக்கு உண்மையிலேயே தமிழ்நாட்டு மேல் அக்கறை இருந்தால், தர்மேந்திரபிரதான் தொடங்கி, அமித்ஷா மோடி வரைக்கும் மேடையில் உட்கார வைத்து,

“இது தமிழ்நாடு! இங்கு அண்ணா வகுத்துக் கொடுத்த இருமொழிக் கொள்கை மட்டும்தான் இருக்கும்” என்று ஆணித்தரமாக பேச முடியுமா அவரால்? ஒரு அடிமையால் ஓனரை எதிர்த்து பேச முடியாது. பிரதமர் மோடியை பார்த்து, “தமிழ்நாட்டுக்கு வரும் போதெல்லாம் ‘வணக்கம்’, ‘நன்றி’ என்று மட்டும் சொல்லி, தமிழில் பேச முடியவில்லை என்று வருத்தப்படுவதாக” சொல்கிறீர்களே, பிறகு ஏன், தமிழைவிட சமஸ்கிருதத்திற்கு 17 மடங்கு அதிகமாக நிதி வழங்குகிறீர்கள் என்று கேள்வி கேட்பாரா, இந்த அடிமை பழனிசாமி?.

அமித்ஷா அவர்களைப் பார்த்து, “சமஸ்கிருதம் தான், அனைத்துக்கும் மூலமொழி” என்று நீங்கள் சொல்வது தவறு என்று பழனிசாமியால் வாதிட முடியுமா? அதற்கான முதுகெலும்பு பழனிசாமிக்கு இருக்கிறதா? அவரை சும்மா ஒன்றும் ஆமாம்சாமி, அடிமைசாமி என்று சொல்லவில்லை. எதற்கெல்லாம் ஆமாம்சாமி போடுகிறார்?. குடியுரிமைத் திருத்தச் சட்டம்! அவர் நினைத்திருந்தால் அவர்கள் எம்.பி.க்கள் ஆதரிக்காமல், அதை தடுத்திருக்க முடியும். ஆனால், ஆமாம்சாமி போட்டு இசுலாமியர்களுக்கு துரோகம் செய்தார். அதேபோன்று, வக்பு திருத்தச் சட்டத்தையும் ஆதரித்து, சிறுபான்மையினருக்கு துரோகம் செய்தார் அடிமைசாமி. அடுத்து, கிறிஸ்தவர்களுக்கு எதிராக F.C.R.A. சட்டம் கொண்டு வரப் போகிறார்கள். கூட்டணியில் இருக்கும் பழனிசாமி, தேர்தலுக்காகவாவது அதை எதிர்த்து பேசியிருக்கிறாரா?.

அடுத்து, நீட் தேர்வை பற்றி பேசுகிறார். நீட் தீர்மானத்தை ஒன்றிய அரசுதான் நிறுத்தி வைத்திருக்கிறது என்று அனைவரும் நினைத்துக் கொண்டிருந்தோம்.

ஆனால், அதை ஒன்றிய அரசு திருப்பி அனுப்பியதையே கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகாலமாக மறைத்து வைத்தவர்தான் பழனிசாமி. அந்த மாதிரி துரோகம் எல்லாம் யாரும் பண்ணவில்லை. உடனே, நாங்கள் என்ன பண்ணோம் என்று கேட்பார்... நான் ஏற்கெனவே பல முறை சொல்லியிருக்கிறேன். நீட் தேர்வு ஒழிக்கப்பட வேண்டும் என்பது எங்களின் நிலைப்பாடு. ஒன்றியத்தில் இந்தியா கூட்டணி ஆட்சி அமைத்திருந்தால், நீட் தேர்வு தமிழ்நாட்டில் இருந்திருக்காது.தற்கான உறுதியை பிரதமர் வேட்பாளராக இருந்த ராகுல் காந்தியே பல கூட்டங்களில் பேசியிருக்கிறார்.

ஆனால், கூட்டணிக் கட்சிகளின் தயவுடன் ஆட்சி அமைத்திருக்கும் பிரதமர் மோடியை பார்த்து, “தமிழ்நாட்டுக்கு நீட் விலக்கு தாருங்கள்” என்று அடிமைசாமியால் கேட்க முடியுமா?. நீட் தேர்வில் இருந்து விலக்கு பெற சட்டப்பூர்வமாக நாங்கள் போராடிக் கொண்டுதான் இருக்கிறோம். கொள்கையை விற்று பிழைக்கும் அடிமைசாமி கூட்டத்துக்கு சுயமரியாதை உணர்வும் இருக்காது; மாநில உரிமைகளும் புரியாது.

இப்போதுகூட, நாடு முழுவதும் மக்கள், “மோடி ஜி, Where is L.P.G.” என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். பல ஹோட்டல்களை இழுத்து மூடி விட்டார்கள். பல ஹோட்டல்களில் மெனுவை குறைத்துவிட்டார்கள். பல ஹோட்டல்களில் விலையை ஏற்றிவிட்டார்கள். இதனால், உணவுக்காக ஹோட்டல்களை நம்பியிருப்பவர்கள்பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் முழுவீச்சில் சரிசெய்ய முயற்சிக்காமல், சிலிண்டர்விலையை 200 ரூபாய் உயர்த்தியிருக்கிறார்கள். அதுவும் சரியாக வழங்கப்படுவதில்லை. இதையெல்லாம் எதிர்த்து பழனிசாமி குரல் கொடுத்திருக்கிறாரா? அதனால்தான், அவரை அடிமைசாமி என்று சொல்கிறோம். துரோகத்தில் டாக்டரேட் வாங்கும் அளவுக்கு அனைவருக்கும் இவ்வளவு துரோகம் செய்துவிட்டு, வாய் கூசாமல் பொய்யாய்பேசிக்கொண்டிருக்கிறீர்களே பழனிசாமி.

தமிழ்நாட்டு மக்கள் ஒன்றை நன்றாக புரிந்து கொள்ள வேண்டும். தமிழுக்கும் தமிழினத்துக்கும் தமிழ்நாட்டுக்கும் துரோகம் செய்வது பா.ஜ.க.வின் வழக்கம்! அதற்குத் துணை போவதுதான் அ.தி.மு.க.வின் பழக்கம்! இவர்களின் அத்தனை துரோகங்களையும் கடந்துதான், நாம் அனைத்து திட்டங்களையும் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். நன்றாக புரிந்துக் கொள்ளுங்கள். டபுள் எஞ்சின், டப்பா எஞ்சின் என்றுசொல்லிக்கொண்டு வரும் என்டிஏ கூட்டணி தமிழ்நாட்டுக்குள் வந்துவிட்டது என்றால், தமிழ்நாட்டை மீண்டும் இருண்ட காலத்துக்குள் தள்ளிவிடுவார்கள்’ எனத் தெரிவித்துள்ளார்.

## ஜனநாயகன் பட விவகாரத்தை அரசியல் ஆக்கக்கூடாது

### சரத்குமார் பேட்டி



சென்னை, ஏப் 12

நடிகர் விஜய் நடித்த ஜனநாயகன் திரைப்படம், தியேட்டரில் வெளியாவதற்கு முன்பே இணையத்தில் வெளியானதற்கு ரஜினி உள்ளிட்ட திரை பிரபலங்கள்கடும்கண்டனம்தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில், நடிகரும் பாஜக நிர்வாகியுமான சரத்குமார் சென்னையில் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:

ஜனநாயகன் திரைப்பட விவகாரத்தை அரசியல் ஆக்கக்கூடாது ஆதவ் அர்ஜுனா எதைப் பார்த்தாலும் அரசியலாக்குகிறார் உங்களுக்கு ஒன்று நடந்துவிட்டால் மத்திய ஆட்சியாளர்கள் தான் காரணம் என்று சொல்வதை வன்மையாக கண்டிக்கிறேன்.

அரசியல் ஆதாயம் காண வேண்டாம் என்று ஆதவ் அர்ஜுனாவிடம் சொல்லிக்கொள்கிறேன். ஜனநாயகன் படத்தை லீக் செய்தவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். உண்மை குற்றவாளிகளை போலீசார் கைது செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

உங்கள் அபிமான தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

### தென்காசி துப்பாக்கி சூடு சம்பவம்:

## பாதிக்கப்பட்ட மணிகண்டன் பெற்றோருக்கு சீமான் ஆறுதல்



தென்காசி, ஏப். 12

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் அருகே மருதம்புத்தூர்பகுதியை சேர்ந்த பனை தொழிலாளி மணிகண்டன். இவர் பனை மரத்தில் இருந்து கள் இறக்கி விற்பனை செய்வதாக கூறி கடந்த ஏப்ரல் 7ம் தேதி சப் இன்ஸ்பெக்டர் இசக்கி ராஜா வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார். அப்போது ஏற்பட்ட வாக்குவாதத்தில் பனை தொழிலாளியை சப் இன்ஸ்பெக்டர் இசக்கி ராஜா துப்பாக்கியால் சுட்டுள்ளார்.

ஆலங்குளத்தில் நேற்று நடைபெற்ற நாம் தமிழர் கட்சியின் பிரசார கூட்டத்திற்கு நேரில்வந்தனர். அங்கே தங்கள் மகனுக்கு நேர்ந்த கொடுமையை எண்ணி கண்ணீர் மல்க அவர்கள் வேதனையை தெரிவித்தனர்.

நாம்தமிழர்கட்சி ஒருங்கிணைப்பாளர்சீமான்வெளியிட்டுள்ளஎக்ஸ்தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

தென்காசி மாவட்டம் மருதம்புத்தூரில் விசாரணைக்கு அழைத்து செல்லப்பட்டு காவல் உதவி ஆய்வாளர் இசக்கிராஜாவால் சிறிதும் மனிதத்தன்மையற்று துப்பாக்கியால் சுடப்பட்ட தம்பி மணிகண்டனின் உடல் நிலை கண்டு பெருந்துயருற்றுள்ள தம்பியின் பெற்றோர் ஆலங்குளத்தில் பிரசார கூட்டத்திற்கு வந்து தங்கள் வேதனையை தெரிவித்தனர்.

சங்க காலம் தொட்டு தமிழ் மக்களின் பயன்பாட்டில் உள்ள கள் இறக்கும் உரிமையை மீட்கவும், பனை தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மீட்கவும், தம்பி மணிகண்டனுக்கு உரிய நீதியை பெற்று தரவும் இறுதிவரைநாம்தமிழர்கட்சிதுணை நிற்கும் என உறுதியளித்து ஆறுதல் தெரிவித்தேன்.

இவ்வாறு அதில் தெரிவித்தார்.

## கன்னியாகுமரியில் இன்று விஜய் ரோடு ஷோ: பொதுக்கூட்டம் ரத்து

தென்தாமரைகுளம்., ஏப். 12.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தவெக சார்பில் போட்டியிடும் 6 வேட்பாளர்களுக்கு ஆதரவாக தவெக தலைவர் விஜய் இன்று பிற்பகல் கன்னியாகுமரியில் ரோடு ஷோ மூலம் பிரசாரம் செய்கிறார்.

இதற்காக சென்னையில் இருந்து விமானம் மூலம் தூத்துக்குடி வரும் விஜய் அங்கிருந்து கார் மூலம் பிற்பகல் 4 மணியளவில் கன்னியாகுமரி மகாதானபுரம் ரவுண்டானா வருகிறார். அங்கு தவெக நிர்வாகிகள் வரவேற்பு அளிக்கின்றனர்.பின்னர்திறந்தபிரச்சாரவேனில் மகாதானபுரம் ரவுண்டானாவில் இருந்து கன்னியாகுமரி ஜீரோ பாயின்ட் வரை ரோடு ஷோ மூலம் வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் செய்கிறார்.பின்னர் அதே வழியில் திரும்பி வரும் விஜய் மீண்டும் தூத்துக்குடிக்கு புறப்பட்டு செல்கிறார்.

இதனால் அகஸ்தீஸ்வரம் விவேகானந்தா கல்லூரியில் இன்று நடைபெற இருந்த தவெக தலைவர் விஜய் பிரசார பொதுக்கூட்டம் ரத்து செய்யப்பட்டது .

# சிலம்பம் சுற்றி வாக்கு சேகரிப்பில் ஈடுபட்ட அதிமுக வேட்பாளர்



வேலூர் : ஏப் 12

வேலூர் மாவட்டம் காட்பாடி சட்டமன்ற தொகுதியில் அதிமுக வேட்பாளராக போட்டியிடும் ᵛ.ராமு குமரப்ப நகர், கிளித்தான் பட்டறை, இந்திரா நகர், பெரிய பட்டறை,மற்றும் ஏரிமுனை உள்ளிட்ட பகுதிகளில் வாக்கு சேகரித்தார்

பின்னர் குமரப்ப நகரில் வாக்கு சேகரித்த ராமு வாகனத்தில் இருந்து கீழே இறங்கி தெருவில் கொம்பு எடுத்துக் கொண்டு சிலம்பம் சுற்றி வாக்கு சேகரித்தார்

அதன்பின்பு குமரப் நகர் பகுதியில் உள்ள சுந்தரி அம்மன் ஆலயத்தில் வழிபாடு நடத்திய பிறகு செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார் அப்பொழுது அவர் கூறுகையில் குமரப்பா நகர் பகுதியில் புதிதாகஒருநூலகம்அமைத்து தரப்படும் என்றும் , வன்றன் தாங்கள் பகுதியில் உள்ள ஏரியில் கலக்கும் கழிவு நீரை அப்புறப்படுத்து நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் ஏர் முனை பகுதியில் மழைக் காலங்களில் தண்ணீர் தேங்குவதை தடுத்து வெளியேற்ற புதிய கால்வாய்கள் அமைத்து தரப்படும் என்றும் கூறினார்.

## அணைக்கட்டு சட்ட மன்ற தொகுதி

# திமுக வேட்பாளர் ஏ.பி. நந்தகுமார் பொதுமக்களிடன் வாக்கு சேகரிப்பு



வேலூர், ஏப்.12

அணைக்கட்டு சட்ட மன்ற தொகுதி திமுக வேட்பாளர் ஏ.பி. நந்தகுமார் எம்எல்ஏ நேற்று மாலை அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட காட்டுப்புத்தூர், சோழவரம், துத்திக்காடு, சின்னபாலம்பாக்கம், சாத்துபாளையம் ஊராட்சியில் உள்ள பொதுமக்களிடம்உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்து பேசுகையில், அணைக்கட்டு தொகுதி மிகப்பெரிய தொகுதி மேலரசம்பட்டில் ஆரம்பித்து கீழ்அரசம்பட்டு வரை கிராமங்கள் நிறைந்த தொகுதியாக உள்ளது.

விவசாயம் அதிக அளவில் உள்ள இந்த தொகுதியில் கலைஞர் ஆட்சியில் கொண்டுவரப்பட்ட இலவச மின்சாரத்தால் விவசாயிகள் பெரிதும் பயனடைந்து வருகின்றனர். ஊசூரில் தொழிற்சாலை திறக்கப்பட்டு தொகுதியைச் சேர்ந்த பலருக்கு அதில் வேலை வாய்ப்பு பெற்று தரப்படும்.

காட்டுப்புத்தூர் பகுதியில் ஒரு ஆடிட்டோரியம் கட்டித் தரப்படும். மீண்டும் வெற்றி பெற்று இந்த தொகுதியில் சுய தொழில்செய்யவிரும்புபவர்களுக்கு வேண்டிய உதவிகள் செய்து தருவேன்.

மூன்றாவது முறையாக சட்டமன்ற உறுப்பினராக பொறுப்பேற்றதும் விடுபட்ட பணிகளையும் செய்து கொடுப்பேன். எனவே, உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும்' என்றார்.

மேலும், சோழபுரம் பகுதியில் சைக்கிளில் சென்று வாக்குசேகரித்தார்.

பிரசாரத்தின் போது கணியம்பாடி தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் கஜேந்திரன், பென்னாத்தூர் பேரூர் செயலாளர் அருள் நாதன், தலை வர் பவானி சசிகுமார். ஊராட்சி மன்ற தலை வர் சசிகலா கோபி. கணியம்பாடி தெற்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ஜெயபிரகாஷ். விசிக கோட்டி, காட்டுப்புத் தூர் முன்னாள் ஊராட்சி தலைவர் பாபு மற்றும் திமுக நிர்வாகிகள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினர் பங்கேற்று ஊர்வலமாகச் சென்று வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

## பென்னாகரம்

# சட்டமன்ற தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் தமிழ் குமரன் தீவிர வாக்கு சேகரிப்பு



தருமபுரி ஏப்ரல் 12

தருமபுரி மாவட்டம் பென்னாகரம் சட்டமன்ற தொகுதியில்மாதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர்ஜி. கே. எம். தமிழ் குமரன் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார். மேலும் புலிக்கரை,, இராமியம் பட்டி உள்ளிட்ட 50 க்கும் மேற்பட்ட கிராமங்களில் கை சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். அவருக்கு பெண்கள் ஆரத்தி எடுத்து சிறப்பு வரவேற்பு அளித்தனர். அவர் கூறியதாவது என்னை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுத்து சட்டமன்றத்திற்கு அனுப்பினால் உங்களுக்கு தேவையான அனைத்துநலத்திட்டங்களையும் செய்வேன் என்று கூறினார். திமுக ஒன்றிய செயலாளர் மற்றும் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் , பொதுமக்கள் கலந்து கொண்டு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

# திருச்சி: இபிஎஸ் உதயநிதி ஒரே விமானத்தில் பயணம்



திருச்சி, ஏப். 12

தேர்தல் பிரச்சாரத்திற்காக திருச்சி செல்லும் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி மற்றும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் இன்று (ஏப்ரல் 11) பிற்பகல் 12.40 மணிக்கு சென்னையில் இருந்து ஒரே விமானத்தில் பயணிக்கவுள்ளனர்.

இருவரும்தேர்தல்களத்தில்வார்த்தைபோரில்ஈடுபட்டு வரும்நிலையில்,ஒரேவிமானத்தில்பயணிப்பதுஅரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# திருச்சி மத்திய சிறையில் கைதியை தாக்கிய 3 பேர் மீது வழக்கு




திருச்சி, ஏப். 12

கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த ராஜேஷ் (26) என்பவர் திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். கடந்த 6ஆம் தேதி, ராஜேஷ் தூங்கும்போது அவரது ஆடை விலகியதால் சக கைதிகளான கொம்பன் கார்த்தி (22), மகேஷ் (21), சண்முகவேல் (22) ஆகியோர் அவரை கேலி செய்துள்ளனர். இதுகுறித்து ராஜேஷ் சிறை அதிகாரியிடம் புகார் அளித்துள்ளார். இதனால் ஆத்திரமடைந்த மூவரும் ராஜேஷை தாக்கி மிரட்டல் விடுத்துள்ளனர். இது தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தி.மு.க.,வுக்கு ஓட்டு கேட்ட நிர்வாகிக்கு கொலை மிரட்டல்

## அ.தி.மு.க., பிரமுகருக்கு வலை

கிருஷ்ணகிரி, ஏப். 12

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் அடுத்த எமக்கல்நத்தத்தை சேர்ந்தவர் ராமன், தி.மு.க., ஒன்றிய வர்த்தகரணி அமைப்பாளர். இவரது மனைவி எல்லம்மாள், 41. இவர், நேற்று முன்தினம் வீட்டில் தனியாக இருந்துள்ளார். மதியம், 2:30 மணி அளவில் சாலிநாயனப்பள்ளியை சேர்ந்த, அ.தி.முக., பிரமுகர் சுரேஷ், 41 என்பவர் சுருளி கத்தியுடன் வந்து ராமனின் வீட்டின் முன் தகராறில் ஈடுபட்டுள்ளார். மேலும், 'பர்கூர், அ.தி.மு.க., வேட்பாளர் கோவிந்தராசனுக்கு எதிராக பிரசாரம் செய்வீர்களா. உங்களை கொன்று விடுகிறன்,' என மிரட்டியுள்ளார். எல்லம்மாள் வீட்டின் கேட்டை மூடி வீட்டிற்குள் சென்றதால் கேட்டை உடைக்க முற்பட்டுள்ளார். அப்போது அக்கம் பக்கத்தினர் சுரேசை தட்டி கேட்டுள்ளனர். அவர்களிடம் கத்தியை காட்டி, மிரட்டிய சுரேஷ், அப்பகுதியை சேர்ந்த சுசீலா என்ற பெண்ணை தாக்கிவிட்டு தப்பி ஓடினார். இந்நிலையில், நேற்று பர்கூர், தி.மு.க., வேட்பாளர் மதியழகன் எம்.எல்.ஏ., பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். தொடர்ந்து அவர் நிருபர்களிடம் கூறியதாவது: பர்கூர், அ.தி.மு.க., வேட்பாளர் கோவிந்தராசன் மீது பல்வேறு வழக்குகள் உள்ளது. பொது சொத்தை சேதப்படுத்துதல் உள்பட வழக்குகளில் சிக்கியவர், அதை மறைத்து வேட்புமனு தாக்கல் செய்துள்ளதாக தேர்தல் ஆணையத்திடம் புகாரும் அளித்துள்ளனர். இந்நிலையில், தி.மு.க.,விற்கு ஓட்டு கேட்ட அக்கட்சி நிர்வாகியை, கோவிந்தராசன் தூண்டுதல் பேரில் அவரது உறவினர் கத்தியை காட்டி மிரட்டி, பெண்களை தாக்கி சென்றுள்ளனர். இது அராஜகத்தின் உச்சம். இது குறித்து போலீசாரிடம் கேட்டால் உரிய பதில் அளிக்க மறுக்கின்றனர். முறைப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். பர்கூர் போலீசார் கூறுகையில், 'சுரேஷ் மீது வழக்குபதிந்து, அவர் வீசி சென்ற கத்தி, மற்றும் வாகனத்தை பறிமுதல் செய்து, தலைமறைவாக உள்ள சுரேசை தேடி வருகிறோம்,' என கூறினர்.

## களியக்காவிளை அருகே

# பூட்டிய வீட்டை உடைத்து 5 பவுன் நகைகள் திருட்டு

மார்த்தாண்டம் , ஏப்.12

களியக்காவிளை அருகே செம்மண் விளை என்ற பகுதியை சேர்ந்தவர் ஜெயசிங் மனைவி ஆனி ஜீவா (39). இவர் தனது குடும்பத்தினருடன் கடந்த 5ம் தேதி வேளாங்கண்ணி மாதா கோயிலுக்கு ஆன்மீக சுற்றுலா சென்றிருந்தார். பின்னர் நேற்று முன்தினம் வீடு திரும்பினார். அப்போது வீட்டின் முன்பக்க கதவு பூட்டு உடைக்கப்பட்ட நிலையில் காணப்பட்டது. உள்ளே சென்று பார்த்தபோது படுக்கை அறையில் இருந்த பீரோவை உடைத்து அதில் வைத்திருந்த செயின். மோதிரம், கம்மல் உள்ளிட்ட 5 பவுன் தங்க நகைகளை மர்ம நபர்கள் திருடி சென்றது தெரிய வந்தது. இது குறித்து ஆனி ஜீவா களியக்காவிளை காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## திமுக ஆட்சியில் 40 ஆயிரம் கோவில்களுக்கு கும்பாபிஷேகம்

# உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்த எம்.எல்.ஏ மார்கண்டேயன்



விளாத்திகுளம் ஏப் 12

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதியில் மதசார்பற்ற கூட்டணியில் போட்டியிடும் திமுக வேட்பாளர் மார்கண்டயேன் விளாத்திகுளம் தொகுதிக்குட்பட்ட மேட்டுப்பட்டி சித்தவநாயக்கன்பட்டி, வேலிடுபட்டி,அம்ம ன்கோவில்பட்டி சிங்கிலிபட்டி ,கல்குமி , பேரிலேவன்பட்டி , முதலிப்பட்டி கீழநம்பியாபுரம்,தெற்கு முத்தலாபுரம் , வீரப்பட்டி,மேலநம்பியாபுரம் உள்ளிட்ட பகுதிகளில் வாக்கு சேகரித்த தற்போதைய விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினரும் திமுக வேட்பாளருமான மார்கண்டயேன் பேசுகையில் தமிழக முழுவதும் சுமார் 40,000 கோவில்களில்திமுக ஆட்சியில்கும்பாபிஷேகம் நடத்தப்பட்டுள்ளது, அதேபோல் சிங்கிலிபட்டி பேரிலேவன்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் நடைபெற்ற கோவில் கும்பாபிஷேகங்களில் மார்க்கண்டேயன் பெயர் இல்லாத கோவிலை கிடையாது, விளாத்திகுளம் தொகுதியில் உள்ள பெரும்பாலான கோவில் கும்பாபிஷேக கல்வெட்டுகளில் மார்க்கண்டயேன் பெயர் கண்டிப்பாக இருக்கும். மீண்டும்திமுக ஆட்சி வந்தவுடன் சிங்கிலிபட்டி முதல் ஆற்றங்கரைக்கு வைப்பாற்றின் நடுவே மேம்பாலம் கட்டித் தரப்படும் எனவும், அதே போல் சிங்கிலிபட்டி, பேரிலேவன்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் அங்கன்வாடி, பேவர்பிளாக் சாலை உள்ளிட்ட செய்த நலத்திட்ட பணிகளை எடுத்துக்கூறியும் உதயசூரியன் சின்னத்திற்கு எம்.எல்.ஏ மார்க்கண்டேயன் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

இந்நிகழ்வில் விளாத்திகுளம் திமுக மத்திய ஒன்றிய செயலாளர்ராமசுப்பு, தொழிலதிபர் செல்வகுமார், முன்னாள் கவுன்சிலர் முனியசாமி, மதிமுக புதூர் மேற்கு ஒன்றிய செயலாளர் ராஜ்குமார் மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள்மற்றும்திமுக நிர்வாகிகள் என பலர் கலந்து கொண்டனர்.

## கீழப்பாவூர் தெற்கு ஒன்றியத்தில்

# திமுக வேட்பாளர் கலைகதிரவனுக்கு ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பு



தென்காசி ஏப்ரல்12

தென்காசி மாவட்டம் கீழப்பாவூர் தெற்கு ஒன்றியத்தில் திமுக வேட்பாளர் கலைகதிரவன் வீடு, வீடாக தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அவருக்கு பொதுமக்கள் ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்று அளித்தனர். தென்காசி சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் டாக்டர் கலைகதிரவன் கீழப்பாவூர் தெற்கு ஒன்றியம் ஆவுடையானூர் ஊராட்சி பகுதிகளில் வீடு, வீடாக சென்று தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். சாலடியூரில் பிரசாரத்தை தொடங்கி பெருமாள்புரம், மருதடியூர், சின்னநாடானூர், அழகம் பெருமானூர், ராசப்பநாடானூர், மாடியனூர், கருவேல்நாடார்தெரு, ஆவுடைசிவன்பட்டி, பொடியனூர், ஆவுடையானூர் பேருந்து நிறுத்தம், மாடக்கண்ணுபட்டி, புதூர், கொண்டலூர் ஆகிய பகுதியில் பொதுமக்களை சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு கேட்டார். சென்ற இடங்களில் எல்லாம் ஏராளமான பெண்கள் திரண்டிருந்து ஆரத்தி எடுத்தும், மலர் தூவியும் உற்சாக வரவேற்பு அளித்தனர். அவர்கள் மத்தியில் வேட்பாளர் கலைகதிரவன் பேசியதாவது மே மாதம் அமையவுள்ள திராவிட மாடல் 2.0 ஆட்சியில் இப்போது கிடைக்கும் சலுகைகள் எல்லாம் இரண்டு மடங்காக கிடைக்கப்போகிறது. அனைத்து குடும்பத்தினருக்கு இல்லத்தரசி திட்டம் மூலம் ரூ.8 ஆயிரம் மதிப்புள்ள பரிசு கூப்பன் வழங்கப்படும். அதில் உங்களுக்கு தேவையான உங்களுக்கு பிடித்த பொருட்களை நீங்களே வாங்கி கொள்ளலாம். முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் கல்வி, சுகாதாரத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. கிராமங்கள் தோறும் என்னென்ன தேவைகள் உள்ளதோ அதனை நிறைவேற்றி தந்துள்ளோம். இந்த ஆட்சி தொடர்ந்திட நீங்கள் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து என்னை வெற்றி செய்ய வேண்டுகிறேன். இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்ச்சிகளில் தென்காசி மாவட்ட திமுக பொறுப்பாளர் ஜெயபாலன், முன்னாள் மாவட்ட செயலாளர் சிவபத்மநாதன், மாநில விவசாய அணி துணை செயலாளர் செல்லப்பா, கீழப்பாவூர் தெற்கு ஒன்றிய செயலாளர் ஜெ.கே. ரமேஷ், கீழப்பாவூர் யூனியன் சேர்மன் காவேரி சீனித்துரை, மாவட்ட மதிமுக செயலாளர் உதயசூரியன், தேமுதிக மாவட்ட செயலாளர் பழனிசங்கர், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் முத்துகுமார், பொதுக்குழு உறுப்பினர் அருள், விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் மாஸ்டர் கணேஷ், விவசாய அணி துணைத்தலைவர் செல்வன், நிர்வாகிகள் ரவிக்குமார், ஜான்நியூட்டன், ராஜேந்திரன், தங்கராஜ், வளர்மதிராஜன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




தருமபுரி நான்கு ரோடு அருகில் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2026 முன்னிட்டு 100% வாக்களிப்பதின் அவசியத்தை குறித்து பொதுமக்கள் மற்றும் இளம் வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இலவச நீர் மோர் பந்தலை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியர் சதீஷ் திறந்து வைத்து பொது மக்களுக்கும், இளம் வாக்காளர்களுக்கும் துண்டு பிரசுரங்களை வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். மகளிர் திட்ட அலுவலர் சுந்தர்ராஜன், தேர்தல் நடத்தும் அலுவலர் காயத்ரி ,செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் லோகநாதன், வட்டாட்சியர் சுகுமார், நகராட்சி ஆணையர் வசந்தி மற்றும் அரசு துறை அலுவலர்கள், நகராட்சி அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## தருமபுரி சட்டமன்ற தொகுதி

# தேமுதிக வேட்பாளர் இளங்கோவன் தீவிர வாக்கு சேகரிப்பு



தருமபுரி ஏப்ரல் 12

தர்மபுரி சட்டமன்ற தொகுதியில் மாதசார் பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி சார்பில் போட்டியிடும் தேமுதிக வேட்பாளர் டாக்டர் இளங்கோவன் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார். மேலும் பாளையம்புதூர் பாகல்பட்டி உள்ளிட்ட 20 க்கும் மேற்பட்ட கிராமங்களில் முரசு சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தர். அவர் கூறியதாவது என்னை வெற்றி பெற செய்து சட்டமன்றத்திற்கு அனுப்பினால் விவசாயிகளுக்கு மீட்டர்இல்லாத இணைப்புகளை வழங்குவேன் ஏரி குளங்களுக்கு நீர் நிரப்ப நடவடிக்கை எடுப்பேன் என்றார். தேமுதிக மாவட்ட செயலாளர் குமார்,

திமுக மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வெங்கடேசன் மற்றும் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

## கடையநல்லூரில்

# தமமுக தலைவர் ஜான் பாண்டியன் அதிமுக வேட்பாளர் கிருஷ்ண முரளியை ஆதரித்து தீவிர பிரச்சாரம்



தென்காசி ஏப்ரல்12

தென்காசி மாவட்டம் கடையநல்லூரில் தமிழக மக்கள் முன்னேற்ற கழக தலைவர் ஜான் பாண்டியன் கடையநல்லூர் சட்ட மன்ற தொகுதி அதிமுக வேட்பாளர் கிருண்ண முரளிக்கு வாக்கு சேகரித்து பிரச்சாரம் செய்தார். அப்போது அவர் கூறியதாவது திமுக ஆட்சியில் நாம் பட்ட கஷ்டங்கள் எல்லாம் போதும் இந்த பகுதியில் கனிமவள கொள்ளையை தடுக்க திமுக எதுவும் செய்யவில்லை ஆயிரம் ரூபாய் கொடுத்துவிட்டு மக்களவை தேர்தலில் வாக்கு கேட்ட திமுக இப்போது 2 ஆயிரம் ரூபாய், 8 ஆயிரம் ரூபாய் கூப்பன் தருவதாக கூறி ஓட்டு கேட்கிறது. இந்த பணம் நமது பணம் இஸ்லாமியர்கள் ஓட்டு போடுவார்கள் என திமுகவினர் பகல் கனவு காண்கின்றனர். கடையநல்லூர் மக்கள் அதிமுக வேட்பாளருக்கு ஓட்டு போட மறந்துவிட்டால் உங்களை நீங்கள் ஏமாற்றிக்கொண்டீர்கள் என்று அர்த்தம் 5 ஆண்டு கால திமுக ஆட்சியில் எங்கு பார்த்தாலும் பாலியல் பலாத்காரம், கொலைகள், கொள்ளைகள் நடந்தது. எடப்பாடி பழனிசாமி தலைமையில் நல்லாட்சி அமைய அதிமுகவுக்கு ஆதரவளிக்க வேண்டும். ஒருவர் சாதியை வைத்து அரசியல் செய்கிறார். சாதியை வைத்து அரசியல் செய்து அங்கீகாரம் இல்லாமல் போனவர் அவர். அவரை எல்லாம் ஊருக்குள்ளேயே விடாதீர்கள். யாரை சொல்கிறேன் என்று புரிந்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். அவர் பெயரை என் வாயால் சொன்னால் அசிங்கம் என்பதால் சொல்லவில்லை. அவரால் அழிவுகள் அதிகம் இழந்தது அதிகம். தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெறும் கிருஷ்ண முரளி அமைச்சர் ஆவார் என்று கூறினார்.

# காட்டுப்பன்றிகளை கட்டுப்படுத்த வனத்துறை சார்பில் துப்பாக்கி ஏந்திய வனகாவலர்கள் நியமனம்

## அதிமுக வேட்பாளர் சத்யா வாக்குறுதி



விளாத்திகுளம் ஏப் 12

தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி சார்பில் தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதியில் அதிமுக வேட்பாளராக போட்டியிடும் சத்யா விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வடக்கு முத்துலாபுரம், தோழமலைப்பட்டி, இனாம் அருணாசலாபுரம், கருப்பூர், சுப்புலாபுரம், வீரப்பட்டி, தெற்கு முத்தலாபுரம், கோட்டூர் காலனிகோட்டூர் கீழநம்பியாபுரம், பொன்னையாபுரம், மேலநம்பியபுரம், உள்ளிட்ட பகுதிகளில் இரட்டை இலை சின்னத்திற்கு வீதி வீதியாக சென்று வாக்கு சேகரித்த வேட்பாளர் சத்யா பேசுகையில், விளாத்திகுளம் பகுதியில் பயிரிடப்பட்டிருக்கும் மக்காச்சோளம் உளுந்து பாசி உள்ளிட்ட விவசாய பயிர்களை சேதப்படுத்தி வரும் பண்றிகளால் விவசாயிகள் கடந்த ஐந்தாண்டுகளாக பெரும் அவதிப்பட்டு வருகின்றனர், காட்டுப்பன்றிகளை கட்டுப்படுத்த ஆட்சி அமைந்த உடன் வனத்துறை சார்பில் துப்பாக்கி ஏந்திய வனகாவலர்கள் நமது பகுதிக்கு நியமிக்கப்படுவார்கள். வைப்பார் அச்சன்கோவில் நதியினைப்பு திட்டம் அதிமுக ஆட்சி வந்த உடனே செயல்படுத்தப்படும். விருதுநகர் மாவட்டம் இருக்கன்குடி நீர் தேக்கஅணையில்இருந்து நாகலாபுரம் வரை துண்டிக்கப்பட்ட கால்வாய் மீண்டும் சரி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு தண்ணீர் வழங்கப்படும் என வாக்குறுதி அளித்தார்.

இந்நிகழ்வில் புதூர் அதிமுக மேற்கு ஒன்றிய செயலாளர் தனவதி, புதூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் தனஞ்செயன், அதிமுக தகவல் தொழில் நுட்ப பிரிவு மாவட்ட தலைவர் மோகன், கரிசல் பூமி வரதராஜன், அதிமுக நிர்வாகிகள் பாரதிய ஜனதாகட்சி நிர்வாகிகள் அதன் கூட்டணி கட்சி நிர்வாகிகள் என பலர் கலந்து கொண்டனர்.

## குமரியில்

# மாற்றுத்திறனாளிகள், 85 வயதுக்கு மேற்பட்டோருக்கான தபால் வாக்குப்பதிவு

## 14.ம் தேதி வரை கலெக்டர் தகவல்



நாகர்கோவில், ஏப்.12

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளிலும் தபால் வாக்கிற்கு தகுதி உள்ள 8,552 வாக்காளர்கள் அதாவது 85 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளி வாக்காளர்களின் வீடுகளுக்கு சென்று வாக்கு பதிவு மேற்கொள்ளும் பொருட்டு தபால் வாக்கிற்கான விருப்பத்தினை தெரிவிக்க படிவம் 12D மேற்படி வாக்காளர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வாக்குச்சாவடி நிலைய அலுவலர்களால் சேகரிப்பட்டுள்ளது.

மேற்படி படிவம் 12D யின் வழியாக வீடுகளில் வாக்கு பதிவு மேற்கொள்ள விருப்பம் தெரிவித்த 85 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளி வாக்காளர்களின் வீடுகளுக்கு சென்று வாக்கு பதிவு மேற்கொள்ளும் பொருட்டு 149 மண்டல அலுவலர்கள் மற்றும் இதர அலுவலர்கள் அடங்கிய குழு மாவட்ட தேர்தல் அலுவலரால் நியமிக்கப்பட்டுள்ளது.

மேற்படி குழுவினர் இன்று 12 ம் தேதி முதல் 14 ம் தேதி வரை காலை 7.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை மண்டல அலுவலர்கள்,

நுண்பார்வையாளர்கள், ஆயுதம் ஏந்திய காவலர்கள், அரசியல் கட்சியின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் மற்றும் ஒளிப்பதிவாளர் அடங்கிய குழுவினர் 85 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளி வாக்காளர்களின் வீடுகளுக்கு சென்று வாக்கு பதிவு மேற்கொண்டு பெறப்பட்ட வாக்குப்பதிவு சீட்டுகளை முத்திரையிட்டு தேர்தல் நடத்தும் அலுவலரின் கட்டுப்பாட்டில் பாதுகாப்பாக வைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே வாக்காளர்கள் போதுமான ஒத்துழைப்பு வழங்கிடுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் அழகுமீனா கேட்டுக் கொண்டுள்ளார்.

முன்னதாக மாவட்ட ஆட்சித்தலைவர் தக்கலையில் அமைந்துள்ள கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு அச்சகத்தில் தபால் வாக்குச் சீட்டுகள் அச்சிடும் பணியனை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

நடைபெற்ற ஆய்வில் விளவங்கோடு சட்டமன்ற தொகுதி நடத்தும் அலுவலர்செந்தூர்ராஜன், கிள்ளியூர் சட்டமன்ற தேர்தல் நடத்தும் அலுவலர் ஈஸ்வரநாதன், அச்சகத்தார், பணியாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

## நாகர்கோவிலுக்கு

# பிரதமர் மோடி 15ஆம் தேதி வருகை ரோடு ஷோ நடக்கும் சாலையை டிஐஜி ஆய்வு



நாகர்கோவில்,ஏப். 12

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் 23ஆம் தேதி நடக்க இருக்கிறது. இதற்காக தேர்தல் பிரச்சாரம் சூடு பிடித்துள்ள நிலையில் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு பிரதமர் மோடி வருகிற 15ஆம் தேதி வருகிறார். அன்று அவர் குமரி மாவட்டத்தில் நடக்கும் ரோடு ஷோ நிகழ்ச்சியில் பங்கேற்று மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளில் போட்டியிடும் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் செய்ய உள்ளார்.

பிரதமர் மோடி பங்கேற்கும் ரோடு ஷோ நிகழ்ச்சி நாகர்கோவில் வேப்பமூடு பகுதியில் உள்ள காமராஜர் சிலை சந்திப்பு முதல் வடசேரி எம் ஜி ஆர் சிலை சந்திப்பு வரை நடைபெற உள்ளது. ரோடு ஷோ தொடங்கும் முன் காமராஜர் சிலைக்கு மாலை அணிவிக்கும் மோடி முடிவில் எம்ஜி ஆர் சிலைக்கு மாலை அணிவிக்கிறார். இதற்கான நிகழ்ச்சி ஏற்பாடுகள் முழு எச்சில் நடைபெற்று வருகின்றன. சுமார் 50,000 பேர் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்கும் வகையில் பாரதிய ஜனதா கட்சியினர் தேசிய செயற்குழு உறுப்பினரும் முன்னாள் ஒன்றிய அமைச்சருமான பொன் ராதாகிருஷ்ணன் தலைமையில் இதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில் பிரதமர் மோடி பங்கேற்கும் ரோடு ஷோ நிகழ்ச்சி நடக்கும் சாலையை டிஐஜி சரவணன் ஆய்வு செய்தார். இதற்காக நேற்று முன்தினம் இரவு நாகர்கோவில் வந்தவர் வேப்ப மூடு முதல் எம்ஜி ஆர் சிலை சந்திப்பு வரையிலான சாலை பகுதியை பார்வையிட்டார். அவருடன் குமரி மாவட்ட எஸ்பி ஸ்டாலின் உள்ளிட்ட போலீஸ் அதிகாரிகளும் உடன் இருந்தனர்.

தொடர்ந்து ஹெலிகாப்டரில் நாகர்கோவில் வரும் பிரதமர் மோடி ஆயுதப்படை மைதானத்தில் உள்ள ஹெலிப்பேடு தளத்தில் வந்து இறங்குகிறார். இதனால் அந்தப் பகுதிகளிலும் ஆய்வு நடைபெற்றது.




தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, தேனி மாவட்டம் பழைய பேருந்து நிலையம் பகுதியில் ( வாக்காளர்களிடையே 100 சதவீத வாக்குப்பதிவை உறுதி செய்யும் நோக்கில் விழிப்புணர்வு கையெழுத்து இயக்கம் நடத்தப்பட்டது. இந்த இயக்கத்தை மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சித்தலைவருமான ரஞ்ஜீத் சிங், தொடங்கிவைத்து பொதுமக்களிடம் வாக்குப்பதிவின் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் (பிஆர்ஓ) ஏ.எடிசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## குமரியில்

# டாரஸ் லாரிகளுக்கு தடை உத்தரவு எதிரொலி

## எல்லையில் குவிந்த டாரஸ் லாரிகள்



நாகர்கோவில், ஏப்.12

குமரி மாவட்டத்தில் வழியாக கனிம வளங்கள் கடத்தும் டாரஸ் லாரிகளால் அடிக்கடி தொடர் விபத்துகள் ஏற்பட்டு உயிர் பலிகள் நடந்து வந்தன. இதனால் நூற்றுக்கணக்கான உயிர்கள் பலியாகி உள்ளன. குமரி மாவட்ட சாலைகள் குறுகியதாக உள்ளதால் டாரஸ் லாரிகள் செல்ல தடை விதிக்க வேண்டும். 4 வழிச்சாலை பணிகள் முழுமையாக முடிந்த பிறகு லாரிகளை இயக்க வேண்டும் என கோரிக்கை எழுந்த வண்ணம் இருந்தன.

இதற்கிடையில் குமரியில் எஸ் பி ஆக ஸ்டாலின் பொறுப்பேற்ற கடந்த ஒன்றரை ஆண்டு காலத்தில் லாரிகளுக்குகடும்கட்டுப்பாடுகள்விதிக்கப்பட்டது. இந்த நிலையில் நேற்று முன்தினம் குமரி மாவட்டம் கலியலை அடுத்த கிறிஸ்துராஜ் என்ற ராணுவ அதிகாரியின்மகள்காட்லின்அபினா(19)என்பவரை திருச்சியில் உள்ள கல்லூரிக்கு அனுப்ப தந்தையும் மகளும்பைக்கில்நாகர்கோவில்ரயில்நிலையத்திற்கு சென்று கொண்டிருக்கும்போது தக்கலை பகுதியில் வைத்து அந்த வழியாக டாரஸ் லாரி ஒன்று பைக்கில் மோதியதில்சம்பவஇடத்திலேயேகாட்லின்அபினா உயிரிழந்தார். கிறிஸ்துராஜ் படுகாயம் அடைந்தார்.

இந்த சம்பவத்தை கண்டித்து உடனடியாக நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர் சீலன் தலைமையில் ஏராளம் பொதுமக்கள் இரவில் மறியல் போராட்டம் நடத்தினர். இதனால் நாகர்கோவில் திருவனந்தபுரம் தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. பின்னர் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் எஸ் பி ஸ்டாலின் பேச்சு வார்த்தை நடத்தினார். பின்னர் 2 நாட்களுக்கு டாரஸ் லாரிகளுக்கு முதலில் தடை விதித்தார்.

தொடர்ந்து மாவட்ட கலெக்டருக்கு இது தொடர்பாக பரிந்துரை செய்யப்பட்டது. இதை அடுத்து மாவட்ட கலெக்டர் அழகுமீனா 4 வழி சாலை பணிகள் முடியும் வரையிலும் குமரி மாவட்டத்திற்குள் கனிம வள லாரிகள் நுழையக்கூடாது என அழகுமீனா நேற்று உத்தரவு விட்டார்.

இந்த உத்தரவு உடனடியாக அமலுக்கு வந்தது. இதை அடுத்து நேற்று முன் தினம் இரவில் இருந்து டாரஸ் லாரிகள் குமரி மாவட்டத்தில் தடை செய்யப்பட்டன. இதனால் மாவட்டத்திற்குள் வந்த டாரஸ் லாரிகள் சோதனை சாவடிகளில் நிறுத்தப்பட்டன. குறிப்பாக ஆரல்வாய்மொழி, குமாரபுரம்நான்குவழிச்சாலையில்நீண்டவரிசையில் டாரஸ் லாரிகள் நிறுத்தப்பட்டுள்ளன. நேற்று காலை கேரளாவுக்கு கனிமங்கள் கொண்டு சென்ற லாரிரகள் திருப்பி அனுப்பப்பட்டன. இந்த தடை உத்தரவை பொதுமக்கள் வரவேற்றுள்ளனர். தற்போது கோடைகால விடுமுறை தொடங்கியுள்ளதால் கன்னியாகுமாரிக்கும் அதிக அளவில் சுற்றுலா பயணிகள் நள்ளிரவில் கார்கள், வேர்களில் வருவது வழக்கம். இந்த நிலையில் இந்த தடை வரவேற்கக் கூடியது என அனைத்து தரப்பினரும் கூறியுள்ளனர். இந்த தடையால் தேசிய நெடுஞ்சாலைகள் நேற்று முன்தின இரவு முதல் வெறிச்சோடி காணப்பட்டன.

## கள்ளக்காதலனை தாக்கிய சம்பவம்

# காயமடைந்த தொழிலாளி சாவு கணவர் உட்பட 3 பேர் கைது



மார்த்தாண்டம், ஏப்.12

குலசேகரம் பகுதியை சேர்ந்தவர்ஜஸ்டின்(48)இவருக்கு லதா என்ற மனைவியும் இரண்டு மகன்களும் உள்ளனர். ஜஸ்டின் மதுப்பழக்கத்திற்கு அடிமையானதால் கணவன் மனைவி இடையே தகராறு ஏற்பட்டு உள்ளது. இதனால் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு லதாவுக்கும்ரப்பர்பால்வெட்டும் தொழிலாளி அஜி (52) என்பவருக்கும் பழக்கம் ஏற்பட்டுள்ளது. நாளடைவில் கள்ளக்காதலாக மாறி லதாகணவனைவிட்டுபிரிந்துதனியாகவீடுவாடகைக்கு எடுத்து வசித்து வந்துள்ளார்.

அவருடன் அஜியும் சேர்ந்து குடியேறினார். இந்த சம்பவம் அஜியின் உறவினர்களுக்கு தெரிய வந்து பிரச்சனை ஏற்பட்டது. இதனால் அஜி காரோட்டில் ஒட்டிலுள்ளலதாவீட்டில்நிரந்தரமாககுடியேறியுள்ளார்.

இந்த நிலையில் கடந்த 5ம் தேதி மாலை லதா, அஜி ஆகியோர் வீட்டில் தனியாக இருக்கும் போது அங்கு வந்த லதாவின் கணவர் ஜஸ்டின் உள்ளிட்ட 4 பேர் கும்பல் வந்து வீட்டை அடித்து உடைத்து லதாவையும் அஜியையும் அடித்து உதைத்து காயப்படுத்தியுள்ளனர். மேலும்கொலைமிரட்டல்விடுத்துவிட்டுசென்றுள்ளனர். இதில் இருவரின் அலறல் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் 2 பேரையும் மீட்டு அஜியை குழித்துறை அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். லதாவை அருமனை அரசு மருத்துவமனையில் உள்ளார். இதற்கிடையில் அஜி மேல் சிகிச்சைக்காக குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டு தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று அஜி காலையில் பரிதாபமாக உயிரிழந்தார். தொடர்ந்து அடுமனை போலீசார் கொலை முயற்சி வழக்கை கொலை வழக்காக மாற்றி பதிவு செய்து லதாவின் கணவர் லாரன்ஸ், அஜித், சந்தீப் ஆகிய மூன்று பேரை கைது செய்தனர். மேல் ஒருவரை தேடி வருகின்றனர்.

### தேனியில்

## 100% வாக்குப்பதிவு இலக்கு - ராட்சத பலூன் மூலம் மக்களுக்கு விழிப்புணர்வு



தேனி, ஏப். 12

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, தேனி மாவட்டம் பழைய பேருந்து நிலையம் பகுதியில் வாக்காளர்களிடையே 100 சதவீதம் வாக்குப்பதிவை உறுதி செய்யும் நோக்கில் சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சித்தலைவருமான ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., கலந்து கொண்டு, தேர்தல் விழிப்புணர்வு குறித்த தகவல்கள் இடம்பெற்ற ராட்சத பலூனை பறக்கவிட்டு நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். இந்த ராட்சத பலூன் மூலம் "ஒவ்வொரு வாக்கும் முக்கியம்", "வாக்குரிமை நம் கடமை" போன்ற வாசகங்கள் பொதுமக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் அமைக்கப்பட்டிருந்தது. இதன் மூலம் வாக்காளர்கள்அனைவரும்தேர்தல்நாளில்கட்டாயம் வாக்களிக்க வேண்டும் என்ற செய்தி வலியுறுத்தப்பட்டது. மேலும், இளைஞர்கள், பெண்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் தேர்தலில் ஆர்வமுடன் பங்கேற்க வேண்டும் என்றும், குறிப்பாக முதல் முறையாக வாக்களிக்க உள்ள புதிய வாக்காளர்கள் தவறாமல் வாக்களிக்க வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டுக்கொண்டார். இந்த நிகழ்ச்சியில் தேர்தல் தொடர்பான அதிகாரிகள், பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள்பலரும்கலந்துகொண்டுவிழிப்புணர்வு நடவடிக்கையை ஆதரித்தனர்.

### போண்டா சுட்டுக் கொடுத்து

## ஓட்டு வேட்டையாடிய பர்கூர் தொகுதி வேட்பாளர் மதியழகன்



கிருஷ்ணகிரி, ஏப். 11

போச்சம்பள்ளி அருகே, கடையில் போண்டா சுட்டு கொடுத்து பொதுமக்களிடம், தி.மு.க., வேட்பாளர் மதியழகன் ஓட்டு சேகரித்தார். கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் சட்டசபை தொகுதிக்குட்பட்ட வேலம்பட்டி, சென்றாயம்பட்டி, கம்பு காலப்பட்டி,நாகரசம்பட்டி,பர்கூர்டவுன்பஞ்.,க்குட்பட்ட பகுதிகளில் பிரசாரம் மேற்கொண்டார். என். தட்டக்கல்பகுதியில்உள்ளஒருகடையில்போண்டா சுட்டு கொடுத்து, அனைவரிடமும் ஓட்டு கேட்டார். பிரசாரத்தி ன்போது பொதுமக்களிடம் அவர் பேசியதாவது:

தமிழகத்தில் எல்லார்க்கும் எல்லாம் என்ற வகையில் ஆட்சி நடந்து வருகிறது. ஓட்டு போட்டவர்களுக்கு மட்டுமல்ல, ஓட்டு போடாதவர்களுக்கும் முதல்வர் ஸ்டாலின்அறிவித்துள்ளதிட்டங்கள்சென்றுள்ளன. ஓட்டு போடாதவர்களும் தற்போது, தி.மு.க.,வுக்கு ஓட்டளிக்க தயாராகி வருகின்றனர். தமிழக அரசின் சிறப்பான திட்டங்களால், நற்பெயர் கிடைப்பதை தடுக்கும் வகையில் மத்திய அரசு நமக்கு கிடைக்க வேண்டிய திட்டங்களை நிறுத்தி வைத்து, பணத்தை தர மறுக்கிறது. இருப்பினும் மத்திய அரசிடம் மண்டியிடாமல், அவர்களை எதிர்த்து நம் திட்டங்களை பெற போராடி வருகின்றோம். ஆனால், அ.தி.மு.க.,வோ அவர்கள் கட்சியையே பா.ஜ.,விடம் அடகு வைத்து விட்டனர். திட்டங்களை வாரி வாரி வழங்கியுள்ள நிலையில், அந்த திட்டங்களை முடக்கி, தமிழகத்தில் மத பிரச்னைகளை உருவாக்க, பா.ஜ., நினைக்கிறது. அது தமிழகத்தில் நடக்காது. காலை உணவுத்திட்டம், தமிழ்புதல்வன், புதுமைப்பெண், மகளிர் உரிமைத் தொகை, நான் முதல்வன் திட்டங்களை நாடே திரும்பி பார்க்கிறது.

தற்போது மகளிர் உரிமைத்தொகையை, 2,000 ரூபாயாக உயர்த்தவுள்ளதாக முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார். மேலும், 8,000 ரூபாய் கூப்பன் வழங்க உள்ளோம். அதில், மக்கள் தங்களுக்கு தேவையான பொருட்களை வாங்கி கொள்ளலாம். விழா காலத்தின்போது ஆபரில் கூப்பனை பயன்படுத்தினால் கூடுதல் விலை உள்ள பொருட்களையும் வாங்கலாம்.திட்டங்கள்தொடர,முதல்வர்ஸ்டாலின் தலைமையிலான, தி.மு.க., ஆட்சி தொடர அனைவரும் ஓட்டளிக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

## கிணத்துக்கடவு சட்டமன்ற தொகுதி வேட்பாளர் கேவிகேஎஸ்.சபரி கார்த்திகேயன் தீவிர வாக்கு சேகரிப்பு



கோவை ஏப்:12

கோவை மாவட்டம் கிணத்துக்கடவு சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் கேவிகேஎஸ் சபரி கார்த்திகேயன் சுந்தராபுரம் பகுதி கழகத்திற்குட்பட்ட பகுதிகளில் மற்றும் சாரதா மில் சாலை, முத்தையா நகர், காந்தி நகர்,எல் ஐ சி காலனி,குறிச்சி ஹவுசிங் யூனிட், பிள்ளையார்புரம், கஸ்தூரி கார்டன், நாகராஜபுரம் ஆகிய பகுதிகளில் பொதுமக்களிடம் உதய சூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தார். உடன் பகுதி செயலாளர் கார்த்திகேயன், கோவை மாவட்ட தெற்கு வர்த்தக அணி துணை அமைப்பாளர் மாரிமுத்து, ஆல்பர்ட் ,நூர் முகமது மற்றும் 97வது வார்டு பகுதி பொதுமக்களுடன் இணைந்து மலர் தூவி வரவேற்றனர். மேலும் நிகழ்வில் 97 வார்டு பொறுப்பாளர் மகாலிங்கம், 100வது கவுன்சிலர் கார்த்திக், 94வது வார்டு கவுன்சிலர் தனலட்சுமி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் புவனேஷ், கூட்டணி கட்சி சேர்ந்த தேமுதிக வாழை இலைமுருகேசன், மக்கள் நீதி மய்யம் சிக்கோ சிவா, மற்றும் திமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலர் உடன் கலந்து கொண்டு வாக்கு சேகரித்தனர்.

## எச்.எம்.எஸ் சங்கத்தின் தொழிலாளர் கோரிக்கை மாநாடு



கோவை ஏப் :12

கோவை மாவட்டம் ராமநாதபுரம் 80 அடி சாலையில் மாநில செயல் தலைவர் டி.எஸ்.ராஜாமணி தலைமை தாங்கினார். இந்த மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய எச்.எம்.எஸ். சங்கத்தின் தேசிய தலைவர் சி.ஏ. ராஜா ஸ்ரீதர் பாசிஸ்ட் பாஜகவுக்கு எதிராக உறுதியான நிலைப்பாட்டுடன் உள்ள தி.மு.க. விற்கும் அதன் கூட்டணி கட்சி வேட்பாளர்களுக்கும் வாக்களிப்பது என்று எங்கள் சங்கம் முடிவு செய்துள்ளது என்று தெரிவித்தார்.

இதுகுறித்து பேசியதாவது தொடர்ச்சியாக ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசு தொழிலாளர் விரோத, மக்கள் விரோத, தேச விரோத செயல்பாடுகளில் ஈடுபட்டு வருகிறது. இதை கண்டித்தும் நான்கு சட்டத் தொகுப்புகளை கொண்டு வந்து தொழிலாளர்களை அடிமைப்படுத்துகிற முயற்சியைக் கண்டித்தும்,

விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணித்ததை கண்டித்தும், அவர்களுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாத பாசிச பா.ஜ.க. அரசை கண்டித்தும், மின்சார சட்டம் கொண்டு வந்து விவசாயிகள் மற்றும் அடித்தட்டு மக்கள் சிறு குறு தொழில் நிறுவனங்கள் பெற்று வந்த இலவச மின்சாரத்தை பறிக்கிற முயற்சியைக் கண்டித்தும், தொழிலாளர்கள் என்ற பெயரில் வேலை செய்வது சம்பளத்திற்கு அல்ல, ஊதியத்திற்கு அல்ல மாறாக அது தர்மத்தின் அடிப்படையிலே என்று சொல்லி, மனுஸ்மிருதியை புக்குத்துவது போன்ற தொடர்ச்சியான பல்வேறு தொழிலாளர் விரோத நடவடிக்கையை எதிர்க்கிற உறுதியான அரசியல் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும் என்ற அடிப்படையில் தமிழகத்தில் தி.மு.க. வேட்பாளர்களுக்கும் அதன் கூட்டணி வேட்பாளர்களுக்கும் வாக்களிக்க வேண்டும் என்று டிசம்பரில் நடைபெற்ற கோவை மாநாட்டில் முடிவு செய்ததன் அடிப்படையில் இந்த மாநாடு நடைபெற்றது.

இந்த மாநாட்டில் எச்.எம்.எஸ். சங்கத்தின் மாநில துணைத்தலைவர் ஜி.மனோகரன்வரவேற்று பேசினார்.

தி.மு.க. பகுதி கழக செயலாளர் ப.பசுபதி, தி.மு.க. மாநில தலைமை பொதுக்குழு உறுப்பினர் வெ.ந.உதயகுமார், மாநகராட்சி பணி குழு தலைவர் சாந்தி முருகன், முருகன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார். எச்.எம்.எஸ்.சங்கத்தின் மாநிலத் தலைவர் மு.சுப்பிரமணியன், இணை பொதுச்செயலாளர் எம்.சுப்பிரமணிய பிள்ளை, பி.கணேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியை கவிஞர் கு.நாகலிங்கம் தொகுத்து வழங்கினார், வீராசாமி நன்றி கூறினார்.

### தூத்துக்குடியில்

## ரூ.72.18 லட்சம் ரொக்கத் தொகை மீண்டும் உரியவர்களிடம் ஒப்படைப்பு; கலெக்டர் தகவல்

தூத்துக்குடி, ஏப். 12

தூத்துக்குடி மாவட்டத்தில் தேர்தல் பறக்கும் படையினர் சோதனையில் இதுவரை ரூ.78 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இதில், விசாரணைக்குப் பிறகு ரூ.72.18 லட்சம் ரொக்கத் தொகை மீண்டும் உரியவர்களிடமே ஒப்படை க்கப் பட்டுள்ளது.

தமிழகச் சட்டமன்ற பொதுத்தேர்தலை முன்னிட்டு, தூத்துக்குடி மாவட்டத்தில் தேர்தல் பறக்கும் படையினர் மற்றும் நிலையான கண்காணிப்புக் குழுவினர் தீவிர சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்று வரை நடத்தப்பட்ட சோதனைகளில் கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் பொருட்களின் விவரங்களை மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சியருமான விஷு மகாஜன் வெளியிட்டுள்ளார். அதன்படி பறிமுதல் செய்யப்பட்ட விவரங்கள் உரிய ஆவணங்களின்றி கொண்டு செல்லப்பட்ட ரூ.78,07,266 ரொக்கம், வாக்காளர்களுக்கு விநியோகிக்கக் கொண்டு செல்லப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் ரூ.10,20,278 மதிப்பிலான இலவசப் பொருட்கள் ,

தேர்தல் விதிமுறைகளை மீறி கொண்டு வரப்பட்ட ரூ.5,12,414 மதிப்பிலான மதுபானங்கள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. பின்பு ஆவணங்கள் மூலம் விடுவிக்கப்பட்டவை பறிமுதல் செய்யப்பட்ட தொகையில், உரிய ஆதாரங்களைச்சமர்ப்பித்த உரியவர்களிடம் களிடம் விசாரணைக்குப் பிறகு ரூ.72,18,146 ரொக்கத் தொகை மீண்டும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளதால், உரிய ஆவணங்கள் இன்றி அதிகப்படியான ரொக்கப் பணத்தையோ, பொருட்களையோ கொண்டு செல்வதைத் தவிர்க்க வேண்டும் எனவும், கண்காணிப்புப் பணிகள் தொடர்ந்து தீவிரப்படுத்தப்படும் என மாவட்ட தேர்தல் அலுவலர் விஷு மகாஜன் தெரிவித்துள்ளார்.



## தெலுங்கில் பேசி ஓட்டு வேட்டையாடியவேப்பனப்பள்ளி தி.மு.க., வேட்பாளர் பாத்தகோட்டா சீனிவாசன்

### செல்லும் இடங்களில் எல்லாம் பெண்கள் உற்சாக வரவேற்பு

கிருஷ்ணகிரி, ஏப். 12

வேப்பனப்பள்ளி சட்டசபை தொகுதியில் தெலுங்கு, கன்னடம் பேசும் மக்கள் அதிகமுள்ளபகுதியில், தெலுங்கு மற்றும் கன்னடத்தில் பேசி தி.மு.க., வேட்பாளர் பாத்தகோட்டா சீனிவாசன் பிரசாரம் மேற்கொண்டார். கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி சட்டசபை தொகுதிக்குட்பட்ட மேலுமலை, சாம்பல்பள்ளம், ஒட்டையனூர், கும்மனூர், புலிஅரசி, பி ஜி துர்கம், பஸ்தலபள்ளி, காளிங்காபவரம், கொடிதிமனப்பள்ளி, தொட்டபள்ளி, கட்டிக்கானபள்ளி, மாரண்டபள்ளி, பெரிய மற்றும் சின்னபேடேபள்ளி உள்ளிட்ட 32 மேற்பட்டகிராமங்களில், தி.மு.க., வேட்பாளர் பாத்தக்கோட்டா சீனிவாசன் பிரசாரம் மேற்கொண்டார்.

அப்போது அவர் பேசியதாவது:

தமிழகத்தில், கடந்த, 5 ஆண்டுகால தி.மு.க., அரசின் திட்டங்கள் பல்வேறு மாநிலங்களில் தேர்தல் அறிக்கையாக கொடுக்கிறார்கள். அப்படியெனில் தமிழகத்தில் சிறப்பான ஆட்சி நடப்பதை அனைவரும் ஒத்துக்கொள்கிறார்கள். தற்போது, மகளிர் உரிமைத்தொகை, 2,000 ரூபாய், 8,000 ரூபாய் கூப்பன் வழங்குகிறோம். அதில், உங்கள் வீட்டிற்கு தேவைப்படும் பொருட்களை வாங்கி கொள்ளலாம். ஏழைகள் வாழ்வு சிறக்க திட்டங்களை வழங்குவது தி.மு.க., மற்றவர்களின் காலை வாரி அதிகாரத்திற்கு வருவது அ.தி.மு.க., மக்கள் நன்கு சிந்தித்து, திட்டங்களை தந்த தி.மு.க.,விற்கு ஓட்டளிக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

பிரசாரத்தின் போது, தெலுங்கு, மற்றும் கன்னடம் அதிகம் பேசக்கூடிய மக்கள் வசிக்கும் பகுதிகளில் தெலுங்கு மற்றும் கன்னடத்திலும் பேசி ஓட்டு கேட்டார். முன்னதாக செல்லும் இடங்களில் எல்லாம் பெண்கள் ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தனர். மகளிருக்கு இலவச பேருந்தை வரவேற்று, நாங்கள் அனைவரும் மீண்டும் திமுகவிற்கு வாக்களிப்பதாக வேட்பாளரிடம் உறுதியளித்தனர். இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் பாக்யராஜ், தேமுதிக ராமகிருஷ்ணன், காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், கொங்குநாடு மக்கள் கட்சி உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்

## உயர்தர புற்றுநோய் சிகிச்சை மையம் அமைக்கப்படும் பாஜ வேட்பாளர் எம் ஆர் காந்தி உறுதி



நாகர்கோவில், ஏப்.12

நாகர்கோவில் சட்டமன்ற தொகுதி பாரதிய ஜனதா கட்சி வேட்பாளர் எம் ஆர் காந்தி நேற்று நாகர்கோவில் வடிவீஸ்வரம் ரத வீதி, இடலாக்குடி, வேதநகர், கண்ணங்குளம், லாலாவிளை, புத்தன்விளை சந்திப்பு, சரக்கல்விளை, இருளப்பபுரம் அப்துல் காதர் ஆஸ்பத்திரி, வல்லன் குமாரன் விளை உள்ளிட்ட பகுதிகளில் தீவிர பிரச்சாரம் செய்தார்.

அவருடன்பாரதிஜனதா மற்றும்அதிமுககூட்டணி கட்சியினர் ஏராளம் பேர் உடன்சென்றனர். எம் ஆர் காந்தி எம்எல்ஏவுக்கு பல்வேறு இடங்களில் பொதுமக்கள் தரப்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. மார்க்கெட் பகுதிகள், கடை வீதிகள் உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் அவர் தீவிரமாக வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். குறிப்பாக கோவில்களிலும் தரிசனம் செய்தார். பிரச்சாரத்தில் எம் ஆர் காந்தி எம் எல்ஏ பேசியதாவது:

குமரி மாவட்டத்தில் ஐடி பார்க் அமைக்க வேண்டும் என்று சட்டமன்றத்தில் குரல் கொடுத்துள்ளேன். நாகர்கோவில் மாநகர மக்களுக்கு குடிநீர் பிரச்சனை பெருமளவில் உள்ளது. எனவே தட்டுப்பாடு இல்லாமல் குடிநீர் பெற்று தரப்படும். நீர் நிலைகள் பாதுகாக்கப்படும்.

நாகர்கோவில் தொகுதிக்கு மத்திய மாநில அரசுகளின் அதிகத் திட்டங்களை பெற்று தருவதில் முன்னுரிமை ஏற்படுத்தப்படும்.

நாகர்கோவிலில் படித்தவர்கள் அதிகம் உள்ளனர். குறிப்பாக சட்ட கல்லூரி அமைக்க வேண்டும் என சட்டமன்றத்தில் கோரிக்கை விடுத்து உள்ளேன். ஆசாரி பள்ளத்தில் உள்ள கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையாக தரம் உயர்த்தப்படும். மேலும் உயர்தர புற்றுநோய் சிகிச்சை மையம் ஏற்படுத்தி தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதையும் சட்டமன்றத்தில் நான் பேசி உள்ளேன். குறிப்பாக நாகர்கோவில் சந்திப்பு ரயில் நிலையத்திற்கு பொதுமக்கள் எளிதில் செல்லும் வகையில் சாலை வசதி, பஸ் வசதி ஏற்படுத்தப்படும் என்று கூறினார்.

### திருமணம் ஆகாத விரக்தியில்

## இளைஞர் தூக்கு போட்டு தற்கொலை

சுசீந்திரம், ஏப். 12

சுசீந்திரம் விநாயகர் தெருவை சார்ந்தவர் விக்னேஷ் இவர் ஐடிஐ முடித்து பெயிண்டிங் வேலை செய்து வருகிறார் இவருக்கும் இவர் அண்ணன் விவேக்கிற்க்கும் இன்னும் திருமணம் ஆகவில்லை

இதனால் மன உளைச்சலில் இருந்த விக்னேஷ் நேற்று வீட்டில் குளியலறையில் குளிக்க சென்றவர் வெகு நேரமாகியும் வெளிவரவில்லை

இதனால் அவரது அண்ணன் விவேக் மற்றும் அக்கம் பக்கத்தினர் கதவை தட்டியும் கதவை திறக்காததால் ஜன்னல் கதவை உடைத்து குளியலறையில் சென்று பார்க்கும் பொழுது குளியல் அறை ஊக்கில் தூக்கு போட்டு தொங்கிய நிலையில் கிடந்துள்ளார்

உடனடியாக அவரை கன்னியாகுமாரி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தனர் பரிசோதித்த மருத்துவர் அவர் ஏற்கனவே இறந்துவிட்டார் என கூறியுள்ளனர்

இதனால் விவேக் சுசீந்திரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார் புகாரின் பேரில் சுசீந்திரம் காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.